1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தாங்கள் சொல்வதைக் குறித்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : நான் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ஆம் தேதியன்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, விதி 42-ன் கீழ் கொடுத்திருந்தேன். அப்படிக் கொடுத்ததை 41-வது விதியின்கீழ் மாற்றியதாக எனக்கு 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ம் தேதியன்று அறிவிக்கப்பட்டது. இப்போது சென்னையில், குடிநீர் கழிவுநீர் கலந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வாரத்தில் இது எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள்.

(ஆ) கலசபாக்கம் கிராமங்களில் யானைக்கால் நோய் பரவுவதை தடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்பு கொடுத்துள்ள உறுப்பினர் மாண்புமிகு திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் இருக்கையில் இல்லாமையால், அவர் சார்பாக திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, ''கலசபாக்கம் தொகுதியில் உள்ள வேடந்தாவடி, கலசபாக்கம் கிராமங்களில் யானைக்கால் நோய் பரவி உள்ளதன் காரணமாக பொதுமக்களிடையே பதட்ட நிலை நிலவுவதால், அந்நோயைத் தடுப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்த' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வட ஆற்காடு மாவட்டம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவும் வாய்ப்புள்ள பகுதியாகும்.

வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூர், இராணிப்பேட்டை, வந்தவாசி, செய்யாறு, காவேரிப்பாக்கம், சத்துவாச்சேரி, பள்ளிக்கொண்டா, ஆகிய இடங்களில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[திரு. திருச்சி, ஆர். சௌந்திரராஜன்] [1979 மார்ச் 10

அரக்கோணம், ஆரணி, குடியாத்தம், திருவண்ணாமலை, வாணியம்பாடி, போளூர், வாலாஜாப்பேட்டை, காந்தி நகர், திருவத்திபுரம் ஆகிய உள்ளாட்சிகளில் விரிவான ஆய்வு செய்யப்பட்டு, நோயின் விகிதம் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட நகராட்சிகளும், பேரூராட்சிகளும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

இம்மாவட்டத்தில், நெமிலி பேரூராட்சி, காங்கேய நல்லூர் சேத்துப்பட்டு ஆகிய இடங்களிலும், மக்கள் நல்வாழ்வுத் துறை தடுப்பு மருந்துத்துறை இயக்குநரால் விரிவான கணிப்பு செய்யப்பட்டு அதன்படி அங்கு யானைக்கால் நோய் பரவியுள்ளதாக, அறியப்பட்டு, அதற்கான தடுப்பு நடவடிக்கை திட்டங்கள் தீட்டப்பட்டு அப்பேரூராட்சிகளின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஆம்பூர், திருப்பத்தூர், பேரணாம்பட்டு, தாரப் படவீடு ஆகிய இடங்களில் கொசு தொல்லை பரவியிருப்பதால் இந் நோயைக் கட்டுப்படுத்த கொசுத் தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நகராட்சியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

கலசபாக்கம் தொகுதியிலுள்ள வேடந்தாவடி கிராமத்தில் 2,800 மக்களும் கலசபாக்கம் கிராமத்தில் 2,400 மக்களும் வசிக்கிறார்கள். இப்பகுதிகளில் யானைக்கால் வியாதி பரவியுள்ளதாக மாவட்ட சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். யானைக்கால் நோய் திடீரென்று தோன்றும் ஒரு வியாதியல்ல. அந்நோயை உண்டாக்கும் கொசுக்களால் கடிக்கப்பட்டவர்களுக்கு ஓராண்டு அல்லது இரண்டாண்டிற்குப் பிறகுதான் அந் நோய் ஏற்படுவது தெரியும்.

தேசீய யானைக்கால் நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் எந்த ஒரு பகுதியின் மக்கள் தொகை 20,000-க்கு மேலும் யானைக்கால் நோயின் அளவு 5 அளவு விழுக்காட்டிற்கு மேலுள்ளதோ அங்கெல்லாம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனடிப்படையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜாப்பேட்டை, இராணிப்பேட்டை, ஆற்காடு, திமிரி, செய்யார், வந்தவாசி, விளாம்பாக்கம், கலவை, பள்ளிகொண்டா பசுமாத்தூர், திருவண்ணாமலை, குடியாத்தம் முதலிய இடங்களில் தடுப்புத் திட்ட நடவடிக்கை செயல்பட்டு வருகிறது. கலசபாக்கம் தொகுதியிலுள்ள வேடந்தாவடி கலசபாக்கம் ஆகிய கிராமங்களின் மக்கள் தொகை 5,200 இருப்பதால் இத்திட்டம் அங்கு செயல்படுத்தவில்லை. ஆயினும் இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு யானைக்கால் தடுப்பு மருந்துகள் கொடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் இப்பகுதிகளில் விரிவான கணிப்பு செய்து தேவையான யானைக்கால் தடுப்புத் திட்டம் தீட்டி அவற்றிற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளின் ஒப்புதல் பெற வேண்டிய நடவடிக்கைகளை பொது நல மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரால் எடுக்கப்படுகிறது.

1. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.—தொடர்ச்சி

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் சித்தமல்லியில் நடந்த நிகழ்ச்சி பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடமிருந்து அறிக்கை வரவில்லை. வந்த பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. செ. சிவசாமி : 41-வது விதியின்கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒரு வாரத்திற்கு முன்னால் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த முறையை நான் அனுமதித்தது பெரிய தவறு என்று உணருகிறேன். இந்தப் பிரச்சினைகள் பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்டால் பதில் சொல்ல முடியும். அடுத்த வாரம் எடுத்துக் கொள்ளப் படும். இன்றைக்கு நேரம் ஆகிவிட்டதால் எடுத்துக் கொள்ளப் படவில்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979—தொடர்ச்சி.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைச் சொல்லச் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக, இந்தப் பிரச்சினையை சமூக பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதி அதற்கேற்றப்படி நம் முடைய கொள்கையை அமைத்துக்கொண்டால் நிச்சயமாகவெற்றி அடைந்திருக்க முடியும். ஆனால் நேற்றையதினம் பேசிய நண்பர்கள் பலர் இந்த மதுவிலக்குச் சட்டமானது அல்லது கொள்கை யானது தோல்வியடைந்த கொள்கை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—1947 ஆம்